1970 நவம்பர் 27]

திரு. இல. பலராமன்: எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்குரிய மதிப் பெண்களை 600-லிருந்து 800 ஆக உயர்த்துவதன் நோக்கம் என்ன? இந்த விடைத்தாள்களைத் திருத்தும் ஆசிரியர்களுக்கு என்ன தகுதி வேண்டும் என்று அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது? குறைந்த சர்விஸ் உள்ளவர்களுக்கும் விடைத்தாள்கள் திருத்தும் வேலை அளிக் கப்பட்டிருப்பது பற்றி அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அது பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: எஸ்.எஸ்.எல்.சி. தேர்வைப் பொறுத்து மொத்த மதிப்பெண்களைத் தற்போது 800 ஆக உயர்த்த உத்தேசம் இல்லை. கீழ் வகுப்புகளில் 7, 8, 9, 10 ஆகிய வகுப்புகளில் 600 மதிப்பெண்களை 800 ஆக உயர்த்த திட்டமிடப் பட்டிருக்கிறது. முதலில் பரிட்சார்த்தமாக மாடல் ஸ்கூலில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். அதிகப்படியான 200 மதிப்பெண்கள், ஹாண்ட் ரைட்டிங் அண்டு எக்ஸ்பிரஷன் 50, கேம்ஸ் அண்டு ஸ்போர்ட்ஸ் 50, காண்டக்ட் அண்டு காரக்டர் 50, லைப்ரரி ரீடிங் 50 என்ற வகையில் பிரிக்கப்பட்டு மாடல் ஸ்கூலில் பரிட்சார்த்தமாகச் செயல்படுத்தப்பட இருக்கிறது. இதைப் பார்த்து அதற்குப் பிறகு மற்றப் பள்ளிக்கூடங்களில் இதை நடைமுறைக்குக் கொண்டு வருவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

## பழனியை சுற்றுலா மையமாக்கல்

* 25 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு வேளாண்மை அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பழனியை சுற்றுலா கேந்திரமாக்க மத்திய அரசிடம் தமிழ்நாடு அரசு விண்ணப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) உண்டு.

(இ) இல்லை.

திரு. சு. துரைசாமி: பழனிக்கு ஏராளமான பக்தர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்து போகிற காரணத்தால், அந்த இடத்தில் மத்திய அரசாங்கத்தின் சுற்றுலாக் கேந்திரம் அமைக்கப் படுமானல் வருமானம் வரும் வாய்ப்பு இருக்கிறது என்பதை அறிந்து அப்படி ஒரு சுற்றுலாக் கேந்திரத்தை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மத்திய அரசு மத சம்பந்தமான இடங்களில் சுற்றுலாக் கேந்திரங்களை அமைப்பதில்லை. மாநில அரசு அப்படிப்பட்ட இடங்களில் சுற்றுலா மாளிகைகள் கட்டத் திட்டமிட்டிருக்கிறது. அந்த வகையில் தற் போது தஞ்சை, கும்பகோணம், திருவண்ணமலை ஆகிய இடங்களில் நான்காவது திட்ட காலத்தில் சுற்றுலா மாளிகைகள் அமைக்கத் திட்டமிருக்கிறது.

[1970 நவம்பர் 27

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி : பழனிக்கும் கோடைக்கானலுக்கும் இடையே மலைப்பாதை அமைய இருக்கிறது. ஆகவே, கோடைக் கானலுக்கு வருகிறவர்கள் பழனிக்கு வருகிற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, பழனியைச் சுற்றுலாக் கேந்திரமாக்க நமது அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதற்கு அறநிலைய இலாகா இருக்கிறது. பழனிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளைப் பொறுத்து அவர்களுக்கு அதிகமான மானியம் கொடுக்கப் படுகிறது. அவர்களே இந்தத் திட்டத்தைச் செய்யலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : சமீபத்தில் அகில இந்திய சுற்றுலா மாநாடு மதுரையில் நடந்தது. தமிழ்நாட்டில் எந்தெந்தப் பகுதிகளை வெளிநாட்டினரைக் கவரும் வண்ணம் சுற்றுலாக் கேந்திரங்களாக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதிலே தமிழக அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மதுரையில் கூடிய மாநாட்டிலே புதிய திட்டம் ஒன்றும் எடுக்கப்படவில்லை. ஏற்கனவே, மத்திய அரசை நாம் வற்புறுத்திய மகாபலிபுரம் திட்டந் தான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. நமது மாநிலத்திலே இந்த மாநாடு நடந்த காரணத்தால் 60,000 ரூபாய் தரப்பட்டது. மதுரைக் கோயிலில் ஒலி-ஒளி அமைக்கும் திட்டத்திற்காக மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி இருக்கிறது. மாநில அரசு 3½ லட்சம் ரூபாயில் அதற்கான கட்டடங்களைக் கட்டிக் கொடுத்தால் 22 லட்சம் ரூபாய் செலவில் மத்திய அரசு அதை நிறைவேற்றித் தர முன்வந்திருக் கிறது.

## விவசாயிகளுக்கு உரம் வாங்க மான்யம்

* 26 வினா.—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு வழங்கப்படும் இரசாயன உரம் விலை மிக அதிகமாக உள்ளபடியால், விவசாயிகள் அதிக உரம் வாங்கும் முறை யில் அரசு மான்யம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கடைப்பிடிக்கும் தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் உரத்திற்குத்தான் அதிகமாகச் செலவிட வேண்டியிருக்கிறது. உரத்தின் விலை தற்போது உயர்ந்துவிட்டதால், மத்திய அரசு மானியம் வழங்க வேண்டுமென்று கேட்க நம்முடைய அரசு முன்வருமா?

மாண்புகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1967–69, ஆண்டுகளில் மத்திய அரசாங்கத்தில் இருந்து வாங்கி வைத்த உரத்தை 1969-ம் ஆண்டு பத்து சதவிகிதம் உயர்த்தி விற்க வேண்டு மென்று மத்திய அரசாங்கம் கூறியபோது நாம் அந்த விலையை